

### கால்வாய் சரிவின் மூலம் ஏற்பட்ட

# நில அமிழ்வு;

# டிபிகேஎல் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளும்

கோலாலம்பூர், ஆக. 30- கோலாலம்பூர், கம்போங் கெரிஞ்சி ஜாலான் பந்தாய் பெர்மாயில் கால்வாய் சரிவின் மூலம் ஏற்பட்ட நில அமிழ்வு பிரச்சினையைக் களைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் சேர்ந்து கோலாலம்பூர் மாநகராண்மை கழகம் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளும்.

அக்கால்வாயில் உள்ள குழாய் விரைவில் சரி செய்யப்படுவதை உறுதிசெய்ய இம்முயற்சி மேற்கொள்ளப்படுவதாக கூட்டரசு பிரதேசத்திற்கான பிரதமர் துறை அமைச்சர் டாக்டர் சலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.

கோலாலம்பூரைச் சுற்றியும் நில அமிழ்வு உட்பட ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கும் இடத்தை, கோலாலம்பூரின் டத்தோ பண்டார், டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முஹமட் ஷரிஃப் பார்வையிடவிருப்பதாக, அவர் கூறினார். முன்னதாக, ஜாலான் பந்தாய் பெர்மாயில் கால்வாய் சரிவு ஏற்பட்டிருப்பதை ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.